*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 4(2) 2021*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received:07th September 2021/Accepted: 17th November 2021*

# நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் நவீன காலம் வரை இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சி: ஓர் வரலாற்று நோக்கு

# (The Progression of Islamic Law from Islamic Era to Modern World: A Historical View)

M.S. Zunoomy[1], M.A.F. Ashfa[2], M.H.M. Nairoos[3]

Facutly of slamic Stuides and Arabic Language, South Eastern University of Sri Lanka

Correspondence: nairooshm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**
இஸ்லாம் கொண்டுள்ள சட்டங்கள் மனித வாழ்வினை சிறப்பாக ஆக்கிக்கொள்ள வழிகோலுகின்றன. இஸ்லாமிய மார்க்கமானது மனித வாழ்வுக்கு தேவையான அனைத்துவித அம்சங்களைக் கொண்டிருப்பது அது இறைவேதமென்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். ஷரீஆ அல்லாஹ்வினாலும் அவனது தூதரினால் முன்வைக்கப்பட்டதாக காணப்படும் அதேவேளை பிக்ஹ் மனித முயற்சியின் விளைவாக கிடைக்கப்பெறுவது எனலாம். இந்தவகையில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா, கியாஸ் ஆகிய மூலாதாரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் இஸ்லாமிய சட்டக்கலையானது நபி (ஸல்) அவர்களது காலம் முதல் நவீன காலம் வரை வளர்ச்சியடைந்துள்ள விதத்தினை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாக காணப்படுகின்றது. இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வரலாற்றாய்வாகும். இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுகள், கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாத்தில் காணப்படுகின்ற ஷரீஆக் கலைகளில் பிரதானமாக கருதப்படும் சட்டக்கலையானது நபி (ஸல்) அவர்களின் காலம் முதலே செயற்பட்டு வருகின்றது. நபியவர்களின் மரணத்தின் பின்னர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரு முதற்தர மூலாதரங்களுக்கு அடுத்தபடியாக இஜ்மா, கியாஸ் தோற்றம் பெற்றன. இந்தவகையில், பிரச்சினையொன்றிற்கு தீர்வைப் பெறுவதற்கான மூலாதாரங்கள் நான்காக வியாபித்தன. குலபாஉர் ராஷிதூன்களின் காலத்திற்கு பின்னர் ஏற்பட்ட ஆட்சி விஸ்தரிப்பும், இஸ்லாத்தின் பரவலும் சட்டக்கலையின் அவசியத்தை மேலும் அதிகரித்தன. இதன்காரணமாக, ஸஹாபாக்கள், தாபிஈன்கள் ஆகியோரின் மாணவர்கள் பல்வேறு பிரதேசங்களுக்கும் குழுக்களாக செயற்பட்டு சட்டக்கலைத் துறைக்கு பல்வேறு பங்களிப்புகளை செய்தனர். அவற்றுள் நூலாக்கம், சட்டத் தொகுப்புகள், மொழிபெயர்ப்புகள் போன்றன அதிகமாக இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட, இமாம்களை பின்பற்றுதல் ‘‘தக்லீத் சிந்தனை’’ இஸ்லாமிய சட்டத்துறை வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைந்தது. ஒவ்வொரு குழுவினரும் ஒரு இமாம் வழிநின்று சட்டங்களைக் கூறுவது அதிகரித்த காரணத்தில் இஸ்லாமிய சமூகத்தில் இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களிலும் இமாம்கள் வழிநின்று தீர்ப்புக்களை புகஹாக்கள் வழங்கினர்.

இதன்தொடரில், இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து இஸ்லாமிய சட்டவியல் இழுபறி நிலையில் காணப்பட்டாலும், இத்துறையில் புதிய கோணங்களில் நின்று அறிஞர்கள் சிந்தித்ததன் விளைவாக இஸ்லாமிய சட்டக்கலையில் பல சிந்தனைகள் தோற்றம் பெற்றன. அவற்றுள், கூட்டு இஜ்திஹாத், ஒப்பீட்டு இஜ்திஹாத், பிக்ஹ் கலைக்களஞ்சியங்கள், தய்ஸீருல் பிக்ஹ், பிக்ஹுல் அகல்லிய்யா, பிக்ஹுல் இ.்க்திலாப், பிக்ஹுத் தஆயுஷ் போன்றன குறிப்பிடத்தவைகளாகும்.

**திறவுச் சொற்கள்:** இஸ்லாமிய சட்டக்கலை, இஜ்திஹாத், இஜ்மா, கியாஸ், பிக்ஹ்

**அறிமுகம்**

மனித இனத்தின் இயக்கு சக்தியாக சட்டங்கள் காணப்படுகின்றன. "சட்டம் இன்றி மனிதன் இல்லை" எனக்கூறலாம். மனித இன வரலாற்றில் சட்டம் பேணப்படாத ஒரு சமூகத்தைக் காண முடியாது. ஒரு நாட்டுக்கு அரசியல் யாப்பு எனவும், நிறுவனத்திற்கு நிறுவனச் சட்டங்களும், அமைப்புகளுக்கு அமைப்புச் சட்டமெனவும், குடும்பங்களுக்கு குடும்பச் சட்டங்கள் எனவும் சட்டமின்றிய மனிதக்கூட்டம் இல்லை என்று கூறலாம். இவ்வாறு, மனித வாழ்வு தொடர்புபடும் அனைத்து துறைகள் தொடர்பாகவும் சட்டங்கள் ஆள்வதனைத் தவிர்க்க முடியாது.

சட்டம் ஒரு பொறுப்புவாய்ந்த அம்சம் என்பதால் அது மனித இனத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும். சமூகங்கள் இந்த சட்டங்கள் மூலமே ஒழுங்கு பெறுகின்றன. அதன் மூலமே தீமைகளைத் தடுக்கின்றன. நன்மைகளையும் நீதியையும் ஏவுகின்றன. அந்த சமூகத்தின் உரிமைகளைக் காக்கின்றன. மக்களைச் சரியான வழியில் இட்டுச் செல்கின்றன.

பொதுவாக, மனித வாழ்வின் தேவைகளே சட்டங்களை உருவாக்குகின்றன. சட்டங்களது தோற்றங்களுக்கும், அதன் அமுலாக்கத்துக்கும் மனிதனின் தேவைகளே அடிப்படைகள். உலகில் தோன்றிய எல்லா மனிதர்களும் சட்டத்துக்கு கட்டுப்பட நினைப்பது தேவை இருப்பதனாலேயேயாகும். எனவே, ஒரு கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு ஒரு சமூகம் தனது இலக்கை அடைந்து கொள்வதற்கு சட்டத்தின் தேவை இன்றியமையாததாகும்.

ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களது உரிமைகள் சரியாக வழங்கப்பட்டு, நீதி அவர்களுக்கிடையே நிலைநாட்டப்பட்டு, அவர்களுக்கிடையே சாந்தியுடனும் சமாதானத்துடனும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து எந்தவொரு தனி நபருக்கும் சமூகத்தில் தீங்கு ஏற்படாது பாதுகாத்து, நன்மையும் பூரணத்துவமும் பெற்று வாழச் செய்வது அந்த சமூகத்தின் அத்தியாவசிய தேவையாக விளங்குகிறது. எனவே, சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனிநபரும் சில செயற்பாடுகளைச் செய்தும், சில செயற்பாடுகளைத் தவிர்த்தும் வாழ வழி நடத்த வேண்டியது சமூகத்தின் தேவையாகும். இவ்வாறு மக்களை வழிநடத்துவதற்குத் தேவையான சில சட்டங்கள் சமூகங்களால் வகுக்கப்படுவதுண்டு. அந்தவகையில், சமூகத்திலுள்ள தனி நபர்களை தீமைகளிலிருந்து காத்து சீரிய வழியில் நடத்திடும் ஒரு கருவியாக இந்த சட்டத்தினை வரையருக்கலாம்.

எனவே, இந்தப் பின்னணியில் நோக்கும் போது சட்டங்கள் யாவும் சமூகத்திற்காக இயற்றப்பட்டவை என்பதுவும், சமூகத்திற்கு சேவை செய்ய அவை தகுதிபெறுவதன் மூலம் மட்டுமே அவை நிலைக்க முடியும் என்பதுவும், சட்டத்தின் கடமை சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதுமே என்பதும் தெளிவாகிறது. இத்தகைய பண்புகளைப் பெறாத எந்தவொரு சட்டமும் நிலைத்திருக்க முடியாதது என்பதோடு, அவை பொருத்தமற்றவை என்பதுடன், அவை பின்பற்றத் தகுயானவை அல்ல என்பதும் சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

அந்தவகையில், மனித இனத்தின் ஈடேற்றத்திற்கு வழிகாட்ட வந்த திரட்சியான சிந்தனையின் தொகுப்பாக அமையும் இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாட்டின் இயங்கு சக்தியாக "அல்பிக்ஹுல் இஸ்லாமியா" (இஸ்லாமிய சட்டவியல்) திகழ்கின்றது. தனிமனிதன் முதல் சமூகம், சர்வதேசியம் எனப் பரந்து செல்லும் அதனுடைய வாழ்வு நெறியையும், கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள், தேசிய, சர்வதேசிய உறவுகள் எனச் செல்லும் சமூகச் செல்நெறிகளையும் ஒருங்கிணைக்கும் பிரதான பணியை இஸ்லாமிய சட்டக்கலை செய்கின்றது (முஹம்மத், 2012).

நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்ட சட்டதிட்டங்களாகும். இவை அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களாகவே காணப்படுகின்றன. இஸ்லாத்தின் உள்ளடக்கமே ஷரீஆ ஆகும் (மின்ஸாரா, 2014). இஸ்லாமிய

சட்டங்களும் இஸ்லாமிய வாழ்க்கை முறையின் அனைத்து விடயங்களும் அல்குர்ஆனின் கோட்பாடுகளினால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு துணையாக அல்ஹதீஸ் இன் பங்களிப்பும் மகத்தானதாக காணப்படுகின்றது. இஸ்லாம் கொண்டுள்ள சட்டங்கள் மனித வாழ்வினை சிறப்பாக ஆக்கிக்கொள்ள வழிகோலுகின்றன. இந்தவகையில், இஸ்லாமிய மார்க்கமானது மனித வாழ்வுக்கு தேவையான அனைத்துவித அம்சங்களைக் கொண்டிருப்பது அது இறைவேதமென்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். மனித வாழ்வின் வெற்றிக்கான இஸ்லாமிய மார்க்கம் கொண்டுள்ள வழிகாட்டல்களில் பிரதானமான விடயமாக ஷரீஆ ரீதியான கலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் தப்ஸீர் கலை, ஹதீஸ் கலை, சட்டக்கலை முப்பெரும் பிரிவுகளாகும். இவைகளைக் கொண்டு இவ்வுலக விடயங்களை வடிவமைத்துக் கொள்ள முடியும். இந்தவகையில், நாளாந்த வாழ்வில் தேவைப்படுகின்ற சட்டம் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் முகமாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்து சட்டக்கலை பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. கால, சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப உருவாகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இஸ்லாத்தின் பார்வையில் தீர்வு வழங்குவது மிக முக்கிய அம்சமாகும். இதனை ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய சட்டக்கலை அறிஞர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். இதனடியாக, இன்று வரை அதனை புறமொதுக்க முடியாதளவிற்கு மனித வாழ்வோடு ஒன்றித்ததாக இக்கலை மாறிவிட்டது. இத்தோரணையில், இவ்வாய்வானது இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சியை முஹம்மத் (ஸல்) அவர்களின் காலம் முதல் நவீன காலம் வரை ஆராய முனைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஷரீஆ அல்லாஹ்வினாலும் அவனது தூதரினால் முன்வைக்கப்பட்டதாக காணப்படும் அதேவேளை பிக்ஹ் மனித முயற்சியின் விளைவாக கிடைக்கப்பெறுவது எனலாம். இந்தவகையில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா, கியாஸ் ஆகிய மூலாதாரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் இஸ்லாமிய சட்டக்கலையானது நபி (ஸல்) அவர்களது காலம் முதல் நவீன காலம் வரை பல்கோணத்தில் நின்று வளர்ச்சியடைந்து வந்துள்ளதா? எனும் ஆய்வு வினாவே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக கருதப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் நவீன காலம் வரை இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியடைந்துள்ள விதத்தினை வெளிக்கொணர்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வரலாற்றாய்வாகும். இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுகள், கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

International Islamic Publishing House இல் 2013 இல் அப்துல் மலிக் அபூபக்கர் என்பவரால் எழுதப்பட்ட "The Historical Development of Islamic Law" என்ற ஆக்கத்தில் இஸ்லாமிய சட்டமானது இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட முன்னைய காலம், நபி(ஸல்) அவர்களது காலம், அபூபக்கர்(ரழி) அவர்களது காலம், உமர்(ரழி) காலம், உஸ்மான் (ரழி), அலி(ரழி), உமையாக்கள் காலம் மற்றும் அப்பாஸியர்களது காலத்தில் எவ்வாறு அமையப்பெற்றிருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.

Institute of Knowledge IOK CHESS இனால் 2021 இல் Shaykh Furhan Zubairi என்பவரால் வெளியிடப்பட்ட "History and Development of Fiqh" என்ற சஞ்சிகையில் "உஸுலுல் பிக்ஹ்" அதாவது இஸ்லாமிய சட்டக்கலையானது பொதுவாக நபி(ஸல்) அவர்களின் காலம், குலபாஉர்

ராஷிதூன்கள் காலம், இஸ்லாமிய தோழர்கள் மற்றும் மூத்த வாரிசுகளின சகாப்தம், இஸ்லாமிய சட்ட விதிகளை தொகுத்து அமைத்த காலம் என வகுத்து அக்காலங்களில் இஸ்லாமிய சட்டம் எவ்வாறு அமையப்பெற்றது எனவும் விளக்கியுள்ளார்.

Programme on Humanitarian Policy and Conflict Research- Harvard University இல் 2009 இல் Nesrie Badawi என்பவரால் எழுதப்பட்ட "Introduction to Islamic Law" எனும் ஆக்கத்தில் ஷரீஆ, பிக்ஹ், பிக்ஹின் முக்கிய மூலாதாரங்கள், இஸ்லாமிய சட்டத்தின் கிளைகள், இஸ்லாமிய மத்ஹப்கள் என்பன விளக்கப்பட்டுள்ளன.

IOSR Journal of Humanities and Social science- 2016 இல் Dr. Labeeb Bsoul என்பவரால் வெளியிடப்பட்ட "The Development of Islamic Jurisprudence: Late Thirteen/ Nineteenth Century to the Early Present" எனும் ஆய்வுக் கட்டுரையில் இஸ்லாமிய நீதித்துறை அதன் மீது வைக்கப்பட்டுள்ள தற்போதைய கோரிக்கைகளையும் அது எதிர்கொள்ளும் தேவைகளையும் மாறும் வகையில் பூர்த்திசெய்ய முடியுமான நவீன காலத்தில் இஸ்லாத்தின் மதிப்பை பாதுகாக்க எடுக்கப்பட்ட எதிர்வினைகளை மதிப்பீடு செய்கின்றது.

University of Baltimore Law Forum - 1975 இல் T.W Lapin என்பவரால் வெளியிடப்பட்ட "On the Origins of Islamic Law" எனும் ஆய்வுக்கட்டுரையில் இஸ்லாமானது மதத்தையும், சட்டத்தையும் ஒன்றாக நோக்குகிறது. ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய சட்டங்களுக்கு அடிபணிந்து நடக்கவேண்டும் எனவும் அச்சட்டத்தினை தமக்கு ஏற்றவாறு இயற்றிக்கொள்ளவோ முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாத்தின் முதல் சட்டமூலாதாரம் குர்ஆன் ஆகும். அதிலிருக்கும் சில சட்டங்களுக்கு விளக்கமளிக்ககூடியதாக ஸுன்னா காணப்படுகிறது. ஸுன்னாவிலும் குறிப்பிடாததை கியாஸ் தெளிவுபடுத்துவதாகவும், அதற்கடுத்து இஜ்மாஉவும் காணப்படுகிறது. இவை இஸ்லாத்தில் சட்ட மூலாதாரங்களாக கருதப்படுகின்றன என்பன பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல்**

**சட்டக்கலைப் பதப்பிரயோகம்:**

இஸ்லாமிய சட்டக்கலையை குறிக்க ஷரீஆ, பிக்ஹ் ஆகிய இரு பதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரு பதங்களும் ஒரே கருத்தில் பயன்படுத்தப்பட்டாலும் இவ்விரண்டும் வெவ்வேறானவை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதாவது பிக்ஹ் சட்டத்தை மாத்திரம் பேசுகின்ற அதேவேளை, ஷரீஆ சட்டத்தையும் அது உருவாக அடிப்படையாக இருந்த கோட்பாட்டையும் பற்றி பேசுகின்றது. எனினும், இவ்விரு பதங்களும் இஸ்லாமிய சட்ட விதிகளைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகின்றன. ஷரீஆ என்ற சொல் ஷரஅ எனும் அறபுச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இதற்கு தெளிவு, விளக்கம், நேரான வழி போன்ற மொழிக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பரிபாஷையில், நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்ட சட்டதிட்டங்களாகும். இவை அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களாகவே காணப்படுகின்றன. இஸ்லாத்தின் உள்ளடக்கமே ஷரீஆ ஆகும் (மின்ஸாரா, 2014). ஷரீஆ, ஷர∴, ஷிர்ஆ ஆகிய சொற்கள் நம்பிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அல்லாஹ் சட்டமாக்கிய அனைத்தினதும் தொகுப்பைக் குறிக்கின்றன என இப்னு தைமிய்யா கூறுகின்றார்.

பகஹ என்ற அறபுச் சொல்லில் இருந்து தோன்றிய பிக்ஹ் எனும் அறபுச் சொல்லானது ஒன்றை ஆழமாக விளங்கிக் கொள்ளல், அறிந்து கொள்ளல், தெளிவுபடுத்தல், விளக்கிவைத்தல் என தமிழ் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றன. தீனைப் புரிந்து கொள்ளுதல் எனும் பரந்த கருத்தில் அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் இப்பதத்தைப் பயன்படுத்தியுள்ளன (அமீன், 1996, அ).

பரிபாஷை ரீதியாக, விரிவான ஆதாரங்களில் இருந்து ஆய்வின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற செயல்சார்ந்த மார்க்க சட்டங்களாகும் (ஸமத், தி.இ.).

இந்தவகையில், ஷரீஆ என்பது பரந்த விடயதானங்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. அதாவது மனிதனின் அனைத்து நடத்தைகளையும் தன்னுள் அடக்கிக் கொள்கின்றது. மறுபுறம், பிக்ஹ் என்பது குறுகிய பரப்பை கொண்டதாக காணப்படுகின்றது. சட்டம் என்பதில் பொதுவாக உள்வாங்கப்படும் விடயங்களை பொதிந்துள்ளது. ஷரீஆ முழுக்க முழுக்க வஹியைப் பிரதிபலிப்பதாக அமைவதனால் அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா இன்றி மனிதனால் ஷரீஆ அறிவைப் பெற்றுக் கொள்ளவே முடியாது. பிக்ஹில் பகுத்தறிவிற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு பகுத்தறிவினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை உறுதிப்படுத்தவே அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்கள் எடுத்தாளப்படுகின்றன. ஆக, ஷரீஆ அல்லாஹ்வினாலும் அவனது தூதரினால் முன்வைக்கப்பட்டதாக காணப்படும் அதேவேளை பிக்ஹ் மனித முயற்சியின் விளைவாக கிடைக்கப்பெறுவது எனலாம் (அமீன், 1996, அ).

பிக்ஹ் துறையில் பிரதானமாக உஸுல், புரூஉ என இரு பகுதிகள் காணப்படுகின்றன. உஸுல் என்பது சட்டவிதிகளைப் பெற உதவுகின்ற மூலாதாரங்கள், அவற்றின் இயல்புகள், சட்டத்தைப் பெறுகின்ற வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படும். புரூஉ என்பது சட்டங்களின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்வதாக காணப்படும் (அமீன், 1996, அ).

இவ்வாறு, சட்டக்கலைக்கு ஷரீஆ, பிக்ஹ் ஆகிய இரு பதங்கள் பயன்படுத்தப்படுவதை அடையாளப்படுத்த முடியும். அடுத்து, இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சிக் கட்டங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

**நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

நபி (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்ததில் இருந்து ஹி. 11ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியை இது குறிக்கின்றது. இக்காலப்பகுதியிலேயே இஸ்லாமிய சட்டக்கலையின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் காணப்பட்டன. ஹி. 11 ஆகின்ற போது இஸ்லாமிய சட்டக்கலை பூரணமாகி விட்டன எனலாம். இதன்போது மனிதனது நம்பிக்கை, ஒழுக்கம், செயல்சார்ந்த அனைத்து விடயங்கள் தொடர்பான இறைவழிகாட்டல்கள் அருளப்பட்டுக் கொண்டிருந்தன. குறிப்பாக, இக்காலத்திலே இஸ்லாமிய சட்டங்கள் யதார்த்த பூர்வமான அமைப்பில் காணப்பட்டன. ஏனெனில், அப்போது எழுந்த சந்தேகங்களுக்கான தெளிவுகளை நபியவர்கள் வழங்கினார்கள். ஸஹாபாக்கள் தங்களுக்கு நடக்கின்ற விடயங்களை நபியவர்களிடம் எடுத்துக் காட்டி விளக்கங்களைப் பெற்றுக் கொண்டதால், இஸ்லாமிய சட்டக்கலையின் ஆரம்ப காலமாக இது காணப்படுகின்றது.

இக்காலத்திலேயே சட்டக்கலையில் துணை மூலாதாரமாகக் கருதப்படும் இஜ்திஹாத் செய்வதற்கான பயிற்சி நபியவர்களினால் வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, பனூ குறைழாவிற்கு அனுப்பப்பட்டவர்களில் ஒரு சாரார் குறித்த இடத்தை அடைய முன்னர் அஸர் தொழுது கொள்ள, மற்றைய சாரார் குறித்த இடத்தை அடைந்த பின்னரே அஸர் தொழுகையை நிறைவேற்றினர். இவ்விடயம் நபியவர்களிடம் கொண்டுவரப்பட்ட போது, அவர்கள் இருவரையும் அங்கீகரித்தார்கள்.

அடுத்து, கியாஸ் எனும் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையை நபியவர்கள் கடமைப் பிடித்திருக்கிறார்கள். அதற்கான அடிப்படையை தனது வாழ்நாட்களிலேயே மேற்கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு தடவை உமர் (றழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து, இன்று நான் நோன்பு நோற்ற நிலையில் பெரும் குற்றம் ஒன்றைச் செய்து விட்டேன், எனது மனைவியை முத்தமிட்டு விட்டேன் என்றார்கள். அதற்கு நபியவர்கள் நோன்பு நோற்ற நிலையில் வாயில் நீரைக் கொப்பளித்தால் அதற்கான தீர்வு என்ன என்று கேட்டார்கள்.

அதற்கு உமர் (றழி) அவர்கள் அதில் பிரச்சினை இல்லை என்றார்கள். அது போன்றுதான் இதுவும் என்று நபியவர்கள் பதில் தந்தார்கள்.

இந்தவகையில், இஸ்லாமிய சட்டக்கலைக்கான அடிப்படை மூலாதாரங்கள் இக்காலத்தில் முழுமை பெற்றதுடன் துணை மூலாதாரங்களுக்கான வழிகாட்டல்களை இக்காலப்பகுதியில் அதிகமாகவே இடம்பெற்றுள்ளன எனலாம்.

**குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

நபி (ஸல்) அவர்கள் மரணித்த ஆண்டிலிருந்து ஹி.11 - ஹி. 41 வரையான காலப்பகுதியை குறிப்பதாக இது காணப்படுகின்றது. நேர்வழிபெற்ற நான்கு ஆட்சியாளர்களும் ஆட்சி செய்த காலமாகும். இக்காலத்தில் இராஜ்ய விஸ்தரிப்பு இடம்பெற்று இஸ்லாம் அறேபிய தேசத்தை விட்டு வெளியிடங்களுக்கு பரவியது. இதனால் இஸ்லாத்தை அதன் தூய வடிவில் மக்களுக்கு எத்திவைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை அக்கால ஆட்சியாளர்கள் கொண்டிருந்தனர்.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அனைத்து சட்டப் பிரச்சினைகளும் நபியவர்களின் முன்னிலையில் எடுத்துக் காட்டப்பட்டு தக்க தீர்வுகள் பெறப்பட்டன. ஆனால், இக்காலப் பகுதியில் அவ்வாறு நிகழ்வதற்கு வாய்ப்பு காணப்படவில்லை. இதனால் நபியவர்கள் கற்றுக் கொடுத்த இஜ்திஹாத் பிரயோகம் இக்காலப் பகுதியில் வெகுவாக இடம்பெற்றன. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவில் நேரடியாக விளக்கமளிக்காத போது, இவ்விரு அடிப்படை மூலாதாரங்களையும் கொண்ட சுயமான இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக, அல்குர்ஆன் ஒன்று திரட்டப்படல், நபியவர்களுக்குப் பின்னர் அடுத்த கலீபா யார் என்ற தெரிவு போன்ற சந்தர்ப்பங்களில் சுய இஜ்திஹாத் இடம்பெற்றது.

அத்தோடு, இஸ்லாமிய சட்டக்கலையின் துணை மூலாதாரமாக கருதப்படும் இஜ்மா இக்காலப் பகுதியில் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகின. ஏனெனில், ஒரு பிரச்சினைக்கான தீர்வு அல்குர்ஆனிலும், அஸ்ஸுன்னாவிலும் காணப்படாத போது, இமாம்கள், தலைவர்கள் ஒன்று கூடி ஒருமித்த கருத்தை பெற்றனர். இதன் மூலம் அக்காலத்தில் இடம்பெற்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பெறப்பட்டன.

குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில் இஜ்மா இடம்பெற்றதற்கான எடுத்துக்காட்டுகளாக, முதலாம் கலீபா அபூபக்ர் (றழி) தெரிவுசெய்யப்பட்டமை, ஸகாத் தர மறுப்போருக்கு எதிராக போர் நடவடிக்கை எடுப்பதற்கான முடிவு எடுத்தமை, முஹம்மத் (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலம் பற்றிய முடிவு எடுத்தமை, அல்குர்ஆனை ஒன்று திரட்டுவதற்கு முடிவு எடுத்தமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இக்காலப்பகுதியில் புதிய பிரச்சினைகளை தீர்க்க மார்க்கத்திற்கு முரணாகாமல் செயற்பட்டு சுய சிந்தனையைப் பயன்படுத்தி தீர்ப்பு வழங்கியவர்களாக, உமர் (றழி), அலி (றழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (றழி), ஆயிஷா (றழி), ஸைத் பின் ஸாபித் (றழி), இப்னு அப்பாஸ் (றழி), இப்னு உமர் (றழி) போன்றவர்களை குறிப்பிட முடியும் (அமீன், 1996, அ). இவ்வாறு இஸ்லாமிய சட்டக்கலையின் அடுத்த கட்ட நகர்வு காணப்பட்டதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**உமையாக்கள் காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

ஹி.41- ஹி.120 வரையான காலப்பகுதியில் உமையா ஆட்சியாளர்கள் ஆட்சி செய்தனர். இக்கால ஆட்சி முறையானது மன்னராட்சியாக அமைந்திருந்தது. இதனால் அறிஞர்கள் ஆட்சியாள்ரகளை விட்டும் தூரம் சென்ற காலப் பிரிவாக கருதப்படுகின்றது (ஸமத், தி.இ.).

இக்காலப் பிரிவில் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு கவாரிஜ், ஷீஆ எனும் இரு பிரிவுகள் தோற்றம் பெற்றதால் இஸ்லாமிய சட்டக்கலையைப் பாதுகாக்க வேண்டி ஏற்பட்டது. அத்தோடு,

இக்காலப்பிரிவில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கும் முஸ்லிம் அறிஞர்கள் அஹ்லுல் ஹதீஸ், அஹ்லுர் ர.்.இ ஆகிய கோணங்களில் நின்று தீர்வுகளை முன்வைத்தனர்.

அஹ்லுஸ் ஹதீஸ் இன் படி தீர்ப்பு வழங்க முற்படுபவர்கள் அஸ்ஸுன்னாவிலேயே முழுக்க முழுக்க தங்கியிருந்தனர். இவர்கள் பகுத்தறிவிற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. ஏனெனில் அவர்கள் வாழ்ந்த சூழல் எளிமையான அமைப்பில் காணப்பட்டதால் அவர்கள் ஹதீஸ்களிற்குள்ளேயே நின்று தீர்வுகளை பெற்றனர். இவ்வாறு ஹதீஸ்களின் அடிப்படையில் தீர்வுகளை வழங்கியதில் மதீனாவாசிகளுக்கு பெரும் பங்குள்ளது. அவர்களுள் ஸஈத் பின் அல்முஸய்யப், உர்பா அல்சுபைர் பின் அல்அவாம், இப்னு சிஹாப் அஸ்ஸுஹ்ரி, அபூபக்ர் பின் அப்துர் ரஹ்மான், உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ், அல்காஸிம் பின் முஹம்மத் ஆகியோர் குறிப்படத்தக்கவர்கள் ஆவர். இவ்வாறு இவர்கள் அஸ்ஸுன்னாவுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மதீனா அறிஞர்கள் அஸ்ஸுன்னாவுக்கும், ஸஹாபாக்களின் நடைமுறைக்கும் முன்னுரிமை வழங்கும் மனப்பாங்கு கொண்டிருந்தமை.
2. ஹதீஸ்களை நன்கறிந்திருந்த ஸஹாபாக்களின் தாயகமாக மதீனா இருந்தமை.
3. கிரேக்க, பாரசீக செல்வாக்கு மதீனாவில் இக்காலப்பகுதியில் ஏற்படவில்லை.
4. உள்நாட்டுக் குழப்பங்கள், தவறான சிந்தனைப் பிரிவுகள் இங்கு ஏற்படவில்லை (அமீன், 1996, அ).

அஹ்லுர் ர.்.இ ஐ பின்பற்றுவோர் தங்கள் தீர்ப்புகளில் பகுத்தறிவையும் பயன்படுத்தினர். அதாவது, இஸ்லாத்தின் பரவலின் காரணமாக பல்வேறு கலாசாரப் பின்னணி கொண்டவர்களை இஸ்லாம் உள்வாங்கிக் கொண்டதால் தீர்ப்பு கேட்பவரின் கால சூழ்நிலைகள், வாழ்க்கை முறைகள் போன்ற விடயங்கள் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. எனினும், இப்பகுத்தறிவைப் பயன்படுத்துதல் ஷரீஆவின் வரையறைக்குள் உட்பட்டே அமைந்திருந்தன. கூபா நகரில் தோன்றிய சட்டக்கலைக் குழுவினரான இப்னு மஸ்ஊத் (றழி), இப்ராஹிம் அந்நகஇ, அல்சஅபி, இப்னு அபீ சுலைமான், அல்கமா பின் கைஸ், அல்அஸ்வத் பின் யதீத், மஸ்ருக் பின் அல்அஜ்தா, சுரைஹ் இப்னல் ஹாரிஸ் போன்றே பகுத்தறிவு சிந்தனைக்கு முதன்மை வழங்கினர். இதற்கான காரணங்களை எம்.ஐ.எம். அமீன் அவர்கள் தனது நூலில் குறிப்பிடும் போது,

1. உமர் (றழி) அவர்களின் வழிகாட்டல் பெற்ற இப்னு மஸ்ஊத் (றழி) கூபாவில் இருந்தமை.
2. குறைவான ஸஹாபாக்கள் இங்கு வாழ்ந்ததுடன், குறைவான ஹதீஸ்களே இவர்களுக்கு கிடைக்கப்பெற்றமை.
3. புதிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படல்.
4. அரசியற் கிளர்ச்சிகள் புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் புழக்கத்தில் காணப்பட்டமை.

இஸ்லாமிய சட்டக்கலையின் அடுத்த நகர்வாக இடம்பெற்றது பிக்ஹ் கலை தனியாக தோற்றம் பெற்றதாகும். அதாவது, இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவினால் வேறுபட்ட பிரதேசங்களுக்கு மார்க்கத்தை நிலைநாட்டும் நோக்கில் சென்றவர்கள் அல்குர்ஆனையும் அல்ஹதீஸையும் மக்களுக்கு கற்பித்தனர். இதனோடு சேர்த்து சட்டக்கலையும் போதிக்கப்பட்டன. இதனால், குறித்த அறிஞர்களுக்கென மாணவர் வட்டம் உருவாகி அவர்கள் இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பான விடயங்களைத் தொகுக்க ஆரம்பித்தனர். இதனால் பிக்ஹ் கலை தனியொரு கலையாக பரிணமிக்க ஆரம்பித்தது.

அதேபோன்று, தாபிஈன்களும் சட்டக்கலையில் அதிக ஈடுபாடு காட்டினர். ஸஹாபாக்களின் அறிவையும் வழிகாட்டல்களையும் பெற்ற தாபிஈன்கள் இக்கலையின் வளர்ச்சிக்கு தொண்டாற்றினர். இதன்போது உமர் இப்னு அப்துல் அஸீஸின் ஆட்சியில் ஹதீஸ்கள்

தொகுக்கப்பட்டதால் சட்டக்கலை ஆய்வுகளுக்கு ஹதீஸ்களை பிரயோகிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இவர்களுக்கு கிடைத்தது.

**அப்பாஸியர் காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

ஹி. 120 - ஹி. 310 வரையான காலப்பகுதியாக இது காணப்படுகின்றது. சட்டக்கலை வளர்ச்சியில் பொற்காலமாக இது கருதப்படுகின்றது. இஸ்லாமிய ஆட்சியின் விஸ்தரிப்பு, இஸ்லாமிய சட்டங்களின் தேவை, சட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான களம் உருவாகியமை, இஸ்லாமிய அறிஞர்கள் சட்டக் கலையில் காட்டிய ஆர்வம், திறமையான முஜ்தஹித்கள் தோன்றியமை போன்ற காரணங்களினால் சட்டக்கலை இக்காலத்தில் துரித வளர்ச்சியின் பால் சென்றது. குறிப்பாக, இக்காலத்தில் ஏற்பட்ட மிகப் பிரதான வளர்ச்சியாக சட்டக்கலை தொடர்பான நூற்கள் தொகுக்கப்பட்டதை குறிப்பிட முடியும். இதுமாத்திரமன்றி இக்காலத்தில் பிக்ஹ் துறையில் காணப்பட்ட சிறப்பம்சங்களாக பின்வருவனவற்றைக் கூற முடியும்.

1. பிக்ஹ் கலையின் பிரதான பிரிவுகளாக உஸூல், புரூஉ ஆகியன வளர்ச்சி கண்டன.
2. பிக்ஹ் கலையின் அடிப்படை மூலாதாரங்களான குர்ஆனியக் கலைகள், ஹதீஸ் கலைகள் வளர்ச்சி கண்டமையால், பிக்ஹ் கலையிலும் வளர்ச்சி ஏற்பட்டது.
3. சட்ட அறிஞர்கள் சமூக அங்கீகாரம் பெற்றனர். இதனால், அவர்களின் மாணவர்களினால் மத்ஹப்கள் தோற்றுவிக்கப்பட்டன (அமீன், 1996, அ).

இந்தவகையில், அனைத்து துறைகளுக்குமான இஸ்லாத்தின் சட்டங்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய கடமை முஜாஹித்களுக்கு ஏற்பட்டதால் சட்டங்களும் அது தொடர்பான கோட்பாடுகளும் பேணப்பட்டு தொகுக்கப்பட்டன.

சட்டம் பெறுவதற்காக குறித்ததொரு முறையை பின்பற்றி சில அறிஞர்கள் இக்காலத்தில் செயற்பட்டனர். அவர்களின் மாணவர்கள் அவற்றை தொகுத்து நூலுருவாக்கம் செய்தார்கள். இவ்வாறு தோற்றம் பெற்றதே 'மத்ஹப்' என இஸ்லாமிய வரலாற்றில் அழைக்கப்படுகின்றது. அவற்றுள் பிரதானமாக ஹனபி, மாலிக், ஷாபிஈ, ஹன்பலி ஆகிய நான்கு மத்ஹப்கள் பயன்பாட்டில் அதிகமாக உள்ளன. இந்தவகையில், இமாம் அபூஹனீபாவினால் கூறப்பட்ட விளக்கங்கள் 'ழாஹிருல் ரிவாயா அஸ்ஸித்தா, 'பிக்ஹுல் அக்பர்', 'அல்ஆலிம் வமுஅல்லிம்' ஆகிய தொகுப்புக்களாக அவர்களின் மாணவர்களினால் தொகுத்து வெளியிடப்பட்டன. இமாம் மாலிக்கின் சட்டத் தீர்ப்புக்கள் 'அல்முவத்தா' என்ற பெயரிலும், இமாம் ஷாபிஈ இன் விளக்கங்கள் 'கிதாபுல் உம்' என்ற பெயரிலும் வெளிவந்தன. அவ்வாறே, இமாம் அஹ்மத் பின் ஹன்பலின் விளக்கங்கள் 'முஸ்னத் அஹ்மத்', 'கிதாபு இதாஅதிர் ரஸூல்' ஆகியனவும் வெளிவந்தன. இவைகளும் இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சிக்கு வித்திடுபவைகளாக இருந்தன (மின்ஸாரா, 2014). இஸ்லாமிய சட்டக்கலையின் துரித வளர்ச்சியின் காரணமாக உஸூலுல் பிக்ஹ் தனிக்கலையாக இக்காலப் பிரிவில் தோற்றம் பெற்றது.

**அப்பாஸியர் ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் இஸ்லாமிய சட்டக்கலை:**

அப்பாஸியர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் ரீதியான தொடர் மாற்றங்களினால் சிற்றரசுகள் தோற்றம் பெற்று ஆட்சியில் ஸ்திரத்தன்மை குறைந்து கொண்டு போனது. அத்தோடு மங்கோலியப் படையெடுப்பும் இஸ்லாமிய சட்டக்கலையில் தேக்க நிலையை உண்டு பண்ணியது. இதனாலேயே, இக்காலப் பகுதியில் இஜ்திஹாதினுடைய வாயில் மூடப்பட்டு மத்ஹப்களை பின்பற்ற வேண்டிய நிலை உருவானது. இது தக்லீத் சிந்தனையின் தோற்றமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. தக்லீத் என்பது பகுத்தறிவை பயன்படுத்தி அக்கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வை குறித்த நான்கு மத்ஹப்களில் மாத்திரம் தேடி பெற்றுக் கொள்கின்ற நிலையாகும். இதனால், மக்களின் பிரச்சினைகளுக்குரிய

தீர்வுகள் முன்னைய முடிவுகளில் இருந்து பெறப்பட்டதே தவிர புதிய இஜ்திஹாத் மேற்கொள்ளப்படவும் அதற்கு அவ்வாட்சியின் போது எதிர்ப்பும் கிளம்பியது. இதனால், சட்டக்கலை வெகுவாகவே தேக்கமடைந்தது எனலாம்.

இவ்வாறு சட்டக்கலை தேக்கமடைந்து காணப்பட்டதால், தர்ஜீஹ் எனும் பல அறிஞர்களின் கருத்துக்களில் மிகப் பொருத்தமானதை தெரிவு செய்யும் துறை வளர்ச்சியடைந்தது. இது சட்டக்கலையின் மற்றுமொரு வளர்ச்சியாகக் கூட கருதலாம்.

இந்தவகையில் நோக்கும் போது, குறித்த நான்கு இமாம்களின் காலங்களிலே சட்டக்கலையில் எழுச்சி காணப்பட்டது. இவர்கள் ஒருவருக்கொருவர் ஆசானாக, மாணவனாக இருந்தவர்கள் என்றவகையில், புரிந்துணர்வுடன் செயற்பட்டனர். தேவையான போது தகுந்த முறையில் விமர்சனங்களை செய்தும் வந்தனர். இதனால், இஸ்லாமிய சட்டக்கலையில் மகத்தானதொரு மாற்றம் ஏற்பட்டதை அவதானிக்க முடிகின்றது. எனினும், இந்த நான்கு இமாம்களுக்கு பின்னர் இவர்களின் மாணவர்கள் தங்கள் ஆசானை பின்பற்றி ஒழுக தலைப்பட்டதன் விளைவாக, அவர்கள் பகுத்தறிவிற்கு முக்கியத்துவம் கொடுத்து கால, சூழ்நிலைக்கேற்ப சட்டத் தீர்ப்புக்களை பெறுவதற்குப் பதிலாக தங்கள் இமாம்களின் போதனைகளை தொகுப்பதிலும், மனனமிடுவதிலும், அதிலுள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டினர். இதனால், சமூகத்தில் ஏற்பட்ட புதிய பிரச்சினைகளுக்கும் தீர்வினை தங்கள் இமாம்களின் தொகுப்புக்களிலேயே தேடினர். இதனால், தேடலறிவு குறைந்து நூற்களிலேயே தக்கியிருந்து விட்டனர். இதனடியாக, மேற்கூறப்பட்டவாறு இஜ்திஹாத் செய்வதற்கான ஆற்றல் குறைந்து இருப்பதை அப்படியே பின்பற்றும் தக்லீத் முஸ்லிம் சமூகத்தில் வியாபிக்கத் தொடங்கி விட்டது. இது முஸ்லிம் உலகில் நிகழ்ந்த அறிவுத் தேக்கமாவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், நபி (ஸல்) அவர்களே இஜ்திஹாத், இஜ்மா போன்ற ஷரீஆவின் துணை மூலாதாரங்களை பெறுவதற்கு பயிற்சியளித்திருக்க இதனை விடுத்து தங்கள் ஆசான்களின் போதனைகளில் மாத்திரம் தங்கியிருந்தது இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட அறிவு மந்த நிலையை சித்தரிப்பதாக அமைந்தது. இதற்கு பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும் பிரதானமாக கூற முடியும். ஏனெனில் பிற்பட்ட காலத்தில் அரசியலையும் பொருளாதாரத்தையும் ஒன்றாகவும் தனி மனிதனோடு தொடர்புபடுகின்ற விவாகம், வக்பு, வாரிசுரிமை போன்றவற்றை இன்னுமொன்றாகவும் அரசியல் நோக்கங்களுக்காக காட்ட முற்பட்டதன் விளைவாகவும் இஸ்லாமிய சட்டக்கலை மந்தமாகியது எனலாம்.

**உஸ்மானிய காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

உஸ்மானிய பேரரசு நிறுவப்பட்ட போது, முஸ்லிம் சமூகத்தின் அகீதா உயிரோட்டம் இழந்து, நடத்தைகளில் ஊழல்கள் மலிந்து, சிந்தனை தேக்கமடைந்து, இஜ்திஹாத் செயலிழந்து, மக்கள் கருத்து முரண்பாடுபட்டு பல குழுக்களாகப் பிரிந்து காணப்பட்டது. இதனால் உஸ்மானிய பேரரசு இத்தகைய சூழலில் இஜ்திஹாதின் பால் மீள்வது சாத்தியமில்லை என்பதை உணர்ந்து ஹனபி மத்ஹபை உத்தியோகபூர்வ மத்ஹபாக அறிவித்தது. ஹனபிக்களில் இருந்தே காழிகளையும் உயர் அதிகாரிகளையும் நியமித்தது. இவ்வாறு மத்ஹப்கள் அரச அங்கீகாரம் பெற்றதால் இஜ்திஹாத் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இயல்பாகவே நிறுத்தப்பட்டதுடன் சட்டத்துறையில் பகுத்தறிவின் மூலம் தீர்வு காண்பதற்கான எத்தனங்களும் தடைப்பட்டன (அமீன், 1996, அ). இதன்காரணமாக, இஸ்லாமிய சட்டக்கலை மீதான மந்த நிலை இக்காலத்திலும் தொடர்ந்து சென்றது. எனினும் இஸ்லாமிய சட்டக்கலையில் சில புதிய திருப்பங்கள் இக்காலப் பகுதியில் ஏற்படவே செய்தன. அவற்றுள் பிரதானமாக மத்ன் எனும் சுருக்க நூற்கள் சட்டக்கலையில் தோற்றம் பெற்றன. அதாவது, முந்தைய காலத்தில் எழுதப்பட்ட இஸ்லாமிய சட்டக்கலை சார்ந்த நூற்களின் சுருக்கத்தை மாத்திரம் மையப்படுத்தி நூற்கள் எழுதப்பட்டன. அவ்வாறே, ஏற்கனவே சட்டக்கலை அறிஞர்களால் கூறப்பட்ட பத்வாக்களை தொகுக்கும் பணி ஆரம்பமானது. அத்தோடு, மஜல்லதுல் அஹ்காம் அல்அத்லிய்யா எனும் சட்டத் தொகுப்பு ஹனபி

மத்ஹபை மாத்திரம் மையப்படுத்தி கொடுக்கல் வாங்கல் மற்றும் சிவில் நடவடிக்கைகளுக்காக அனைத்து நீதிமன்றங்களிலும் சட்டமாக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆக, இஸ்லாமிய சட்டக்கலையானது பரந்த பரப்பிலிருந்து குறுகிய பகுதியை நோக்கிச் சென்றதை அடையாளப்படுத்த முடியுமாக உள்ளது.

**நவீன காலத்தில் இஸ்லாமிய சட்டக்கலை:**

1924ம் ஆண்டு இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்தாலும் இஸ்லாம் நிலைத்து நிற்கத் தவறவில்லை. இந்தவகையில், இக்காலப் பகுதியில் இஸ்லாமிய சட்டக்கலையில் ஏற்பட்ட மாற்றங்களாக ஒன்றாக, கூட்டு இஜ்திஹாத் அறிமுகப்படுத்தப்பட்டது. தலைசிறந்த சட்டத்துறை அறிஞர்கள் ஒன்று கூடி புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் இது ஆரம்பிக்கப்பட்டது. இந்தவகையில், 1961ல் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தை மையப்படுத்தி மஜ்மஉல் புஹுஸ் அல்இஸ்லாமிய்யா என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஒப்பீட்டு பிக்ஹின் வளர்ச்சி; அதாவது மத்ஹப்களின் கருத்துக்களை ஒப்புநோக்கி மிகச் சரியானதை தெரிவுசெய்தல். அதேபோல் இஸ்லாமிய சட்டத்தையும் மேற்கு சட்டத்தையும் ஒப்புநோக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பின்னர், 1956ல் டமஸ்கஸ் சட்டக் கல்லூரி பிக்ஹ் கலைக்களஞ்சியம் ஒன்றை வெளியிட்டது. 1961ல் எகிப்து, சிரியா போன்ற நாடுகள் இணைந்து ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி, ழாஹிரி, இமாமி, ஸைதி, இபாதி ஆகிய மத்ஹப்களின் சட்டங்களைக் கொண்டு ஒரு கலைக்களஞ்சியத்தை வெளியிட்டது.

இக்காலப் பிரிவில் இஸ்லாமிய வங்கி முறைகளுக்கான சட்டத் தொகுப்பு, தய்ஸீருல் பிக்ஹ் எனும் சட்டக்கலையை இலகுபடுத்தல் தொடர்பான ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின. இதற்கு பங்களிப்பு செய்தவர்களில் அல்கர்ளாவி பிரதானமானர் ஆவார், பிக்ஹுல் அகல்லியா எனப்படும் முஸ்லிமல்லாத பெரும்பான்மையினர் மத்தியில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய சட்டம் எவ்வாறு அமைய வேண்டுமென ஆராய்தல், பிக்ஹுல் இ.்.க்திலாப் எனும் சட்டக் கருத்து வேறுபாடுகளை கையாளுதல் தொடர்பான விடயதானங்கள், பிக்ஹுத் தஆயுஷ் எனும் பல்லின சமூகத்தில் சக வாழ்வு மேற்கொள்வது தொடர்பான சிந்தனை போன்றன இஸ்லாமிய சட்டக்கலையின் துணையம்சங்களாக வளர்ச்சி பெற்றன.

காலத்திற்கு காலம் சட்டக் கலை அறிஞர்கள் தோற்றம் பெறுவது இயற்கையின் நியதி என்றவகையில், நவீன காலத்தில் நஸ்ருதீன் அல்பானி, அப்துல் வஹ்ஹாப், ஹல்லாப், அபூஸஹ்ரா, ஹில்ர், உமர் ஸுலைமான் அல்அஸ்கர், நஸர் பரீத் வாஸில், ஸாலிஹ் அல் உதைமீன், அல்கர்ளாவி போன்றோர் நவீன கால சட்டத்துறைக்குப் பங்களிப்பு செய்தவர்களாக விளங்குகின்றனர் (மின்ஸாரா, 2014).

**முடிவுரை**

இஸ்லாத்தில் காணப்படுகின்ற ஷரீஆக் கலைகளில் பிரதானமாக கருதப்படும் சட்டக்கலையானது நபி (ஸல்) அவர்களின் காலம் முதலே செயற்பட்டு வருகின்றது. நபியவர்களின் மரணத்தின் பின்னர் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரு முதற்தர மூலாதரங்களுக்கு அடுத்தபடியாக இஜ்மா, கியாஸ் தோற்றம் பெற்றன. இந்தவகையில், பிரச்சினையொன்றிற்கு தீர்வைப் பெறுவதற்கான மூலாதாரங்கள் நான்காக வியாபித்தன. குலபாஉர் ராஷிதூன்களின் காலத்திற்கு பின்னர் ஏற்பட்ட ஆட்சி விஸ்தரிப்பும், இஸ்லாத்தின் பரவலும் சட்டக்கலையின் அவசியத்தை மேலும் அதிகரித்தன. இதன்காரணமாக, ஸஹாபாக்கள், தாபிஈன்கள் ஆகியோரின் மாணவர்கள் பல்வேறு பிரதேசங்களுக்கும் குழுக்களாக செயற்பட்டு சட்டக்கலைத் துறைக்கு பல்வேறு பங்களிப்புகளை செய்தனர். அவற்றுள் நூலாக்கம், சட்டத் தொகுப்புகள், மொழிபெயர்ப்புகள் போன்றன அதிகமாக இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட, இமாம்களை பின்பற்றுதல்

''தக்லீத் சிந்தனை'' இஸ்லாமிய சட்டத்துறை வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைந்தது. ஒவ்வொரு குழுவினரும் ஒரு இமாம் வழிநின்று சட்டங்களைக் கூறுவது அதிகரித்த காரணத்தில் இஸ்லாமிய சமூகத்தில் இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களிலும் இமாம்கள் வழிநின்று தீர்ப்புக்களை புகஹாக்கள் வழங்கினர்.

இதன்தொடரில், இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து இஸ்லாமிய சட்டவியல் இழுபறி நிலையில் காணப்பட்டாலும், இத்துறையில் புதிய கோணங்களில் நின்று அறிஞர்கள் சிந்தித்ததன் விளைவாக இஸ்லாமிய சட்டக்கலையில் பல சிந்தனைகள் தோற்றம் பெற்றன. அவற்றுள், கூட்டு இஜ்திஹாத், ஒப்பீட்டு இஜ்திஹாத், பிக்ஹ் கலைக்களஞ்சியங்கள், தய்ஸீருல் பிக்ஹ், பிக்ஹுல் அகல்லிய்யா, பிக்ஹுல் இ∴க்திலாப், பிக்ஹுத் தஆயுஷ் போன்றன குறிப்பிடத்தவைகளாகும்.

இந்தவகையில், இன்றைய நாட்களில் ஒரு மத்ஹபின் கருத்தை ஏற்று முழுமையாகப் பின்பற்றுகின்ற செயன்முறை சில பிரதேசங்களில் காணப்பட்டாலும் பெரும்பான்மையாக, அனைத்து சட்டக் கருத்துக்களையும் ஒப்பு நோக்கி சரியானதை பெற்றுக் கொள்கின்ற இயல்பு வளர்ந்துகொண்டு வருகின்றது. ஏனெனில், இன்றைய நவீன தொழிநுட்ப உலகில் இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பான விடயப் பரப்புகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடிவதால், ஒப்பு நோக்கி ஆராய்வதும் இலகுவாக காணப்படுகின்றது. ஆக, இஸ்லாமிய சட்டக்கலை விழிப்பு பெற்ற காலமாக நவீன காலத்தை அடையாளப்படுத்தலாம்.

இன்று தகவல்களை இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கான சாதனங்கள் அதிகமாக காணப்படுவதும், இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பான பரப்புகளை ஆராய்கின்ற அமைப்புக்கள் உயிரோட்டமாக செயற்படுவதனாலும் இக்காலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கூட்டு இஜ்திஹாத் போன்ற முறைகளினூடாக பெற்றுக் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, முஸ்லிமல்லாத சட்டவல்லுனர்களால் இஸ்லாமிய சட்டக்கலை தொடர்பாக எழுதப்படுகின்ற நூற்களும், ஆய்வுகளும் இஸ்லாமிய சட்டக்கலையின் யதார்த்தத் தன்மையை அந்நிய மதத்தவர்களுக்கு பறைசாட்டுவதாக உள்ளன. சர்வதேச நீதிமன்றத்தின் துணைத்தலைவர் எழுதிய ''இஸ்லாமியச் சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை'' (ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: முஹம்மத் ஸனீர்) இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு பல ஆக்கங்களை இன்றைய நாட்களில் கண்டுகொள்ள முடியும்.

ஆக, அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, இஜ்மா, கியாஸ் ஆகிய மூலாதாரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் இஸ்லாமிய சட்டக்கலையானது பல் கோணங்களில் நின்று வளர்ச்சி கண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**உசாத்துணைகள்:**


அமீன், எம்.ஐ.எம். (1996, அ). *இஸ்லாமிய சட்டக்கலை (ஒரு வரலாற்று நோக்கு).* பேருவளை: அல்கலம் பதிப்பகம்.

அமீன், எம்.ஐ.எம். (2006, ஆ). *இஸ்லாமிய சட்டக்கலை மூலாதாரங்கள்.* இலங்கை: இலங்கைத் தேசய நூலக சேவைகள் சபை.

அரூஸ்; மஸாஹிர், எஸ்.எம்.எம். (2014). *இஸ்லாமிய ஷரீஆ சட்டம் அவசியமும் சாத்தியமும்.* கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

சயீத், ஏ.எம். (2004). *இஸ்லாமியச் சட்டம்.* தஞ்சாவூர்: ஹாஜியார் புக் டிபோ.

வீரமன்த்ரி. (2009). *இஸ்லாமியச் சட்டவியல்.* மொழிபெயர்ப்பு; முஹம்மத் ஸனீர். இந்தியா: மாற்றுப் பிரதிகள்.

மின்சரா, ஜே.எப். (2014). *இஸ்லாமியச் சட்டம். ஓர் அறிமுகம்.* இலங்கை: தென்கிழக்கு ஆய்வு மையம்.

முஹம்மது அமீன், முஹம்மது இப்ராஹீம். (2006). *இஸ்லாமிய சட்டக்கலை மூலாதாரங்கள்.* மாவனல்ல: ஆசிரியர் வெளியீடு.

முஹம்மத் றியால், எம்.எஸ். (2012). இஸ்லாமிய சட்டக்கலையில் தோற்றமும் அடிப்படைகளும். http://kalvivali.blogspot.com/2012/02/blog-post_18.html?m=1

ஸமத், அக்ரம் அப்துல். (தி.இ.). *இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சி வரலாறும் இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் தன்மையும்.* (accessed on 31 May 2021), <www. academia.edu>.

Abubaker, A. (2013). Trade for Peace not for Conflict: Harari Experience. *Law, Social Justice & Global Development Journal* (LGD), 2013(1).

Badawi, Nesrine. (2019). *Introduction to Islamic law*. Programme on Humanitarian policy and conflict research- Harvard University.

Bsoul, Labeeb. (2016). The Development of Islamic Jurisprudence: Late Thirteenth/Nineteen century to the Early Present. *Indian Journal of Scientific Research*. 29.

Lapin, T. W. (1975). On the Origins of Islamic Law. *University of Baltimore Law Forum*, 6(2), Article 12. Available at: http://scholarworks.law.ubalt.edu/lf/vol6/iss2/12

Zubairi, Shaykh Furhan. (2020). *History and development of fiqh*. Institute of knowledge IOK CHESS. https://iokchess.com/history-and-development-of-fiqh/